

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளை முன்னிட்டு விழுப்புரம் நகரக் கழக அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கழகக் கொடியேற்றி இனிப்புகளை வழங்கினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி, தே.முருகவேல், பி.வி.ஆர்.விஸ்வநாதன், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (நான்காவது பட்டியல்)

**ஆதி திராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு !**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர்நலக்குழு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் : பி.ஆர்.வேலுசாமி 4/22. பரமேஸ்வரன் பாளையம், தேவராயபுரம் அஞ்சல், கோவை - 641109.

துணைத் தலைவர்: சி.பன்னீர்செல்வம் 1/210, கண்ணம்பாளையம், காரமடை, கோவை.

அமைப்பாளர்: **ர.சிவசாமி** 6/44, காந்தி காலனி, தென்னமநல்லூர், கோவை - 109.

துணை அமைப்பாளர்கள் : த.ராஜகோபால் 21/31, குட்டேயூர் மாதேஸ்வரன்புதூர், மேட்டுப்பாளையம், கோவை. கோ.செல்வகுமார் 186, சாத்திரி வீதி, காளப்பட்டி, கோவை. ஆ.ராஜேஷ் அர்ஜுனர் காலனி, நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை. சொ.முரளிதரன் 6, தந்தை பெரியார் நகர், சரவணம்பட்டி, கோவை. சம்பத் கண்ணன் 51, லெனின் வீதி, விளாங்குறிச்சி, கோவை 641035. க.ஆறுசாமி 3/124, பெரியார் நகர், நல்லி செட்டிபாளையம் அஞ்சல், அன்னூர், கோவை.

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் வீ.செந்தில்குமார் 5/14, சீராம்பாளையம், போடிபாளையம் அஞ்சல், மதுக்கரை, கோவை - 641105.

துணைத் தலைவர் மாணிக்கவேல் நந்தனார் காலனி, பல்லடம் சாலை, பொள்ளாச்சி - 642005.

அமைப்பாளர் : **கி.ஞானசேகரன்** 5/9, இம்மிடிபாளையம், சொலவம் பாளையம், கிணத்துக்கடவு - 642109.

துணை அமைப்பாளர்கள் : கே.பி.சண்முகம் 6/138, கொள்ளுப்பாளையம், கணியூர்அஞ்சல், சூலூர் 641659. ஆர்.ரவிசந்திரன் 9/945, அண்ணா நகர், வால்பாறை 642127. ஆர்.மணி மோகன் 7/33, பெரியார் நகர், செலக்கரிசல், சூலூர் 641658. டி.பஞ்சலிங்கம் 86, அம்பேத்கர் வீதி, விடுகபாளையம், பொள்ளாச்சி 642001. ந.சிவசங்கர் 5/101, ஆலம்பாளையம் எரிப்பட்டிஅஞ்சல், பொள்ளாச்சி 642217. ர.அருள்ராஜ் 3/189, ஆதிதிராவிடர் காலனி, பிச்சனூர், கோவை 641661.

### ஆவடி மாநகரம்

தலைவர்: சி.முல்லை ஜெகன் 73, பள்ளி விநாயகர் கோவில் தெரு, திருமுல்லைவாயல், சென்னை 62.

துணைத் தலைவர்: ஜி.ராஜ்குமார் திருவள்ளூர் தெரு, திருமுல்லைவாயல் காலனி, சென்னை 62.

அமைப்பாளர்: **தண்டுரை கோபி** தண்டுரை, பட்டாபிராம், சென்னை.

துணை அமைப்பாளர்கள்: செல்வம் சி.டி.எச் சாலை, ஆவடி, சென்னை 54. வினோத் 16, பஜா நகர், 3வது தெரு, என்.எம் சாலை, சென்னை 54. க.சுரேஷ்குமார் 25, மாரியம்மன் கோவில் தெரு, சேக்காடு, சென்னை 71. ரஞ்சித் குமார் 4, நவஜீவன் நகர், பட்டாபிராம், சென்னை. தியாகராஜன் 10, மாசிலாமணி தெரு, செந்தமிழ் நகர், அண்ணாநகர், பட்டாபிராம், சென்னை 72. ரா.முரளி 58, திருவள்ளுவர் தெரு, காமராஜபுரம், பட்டாபிராம், சென்னை - 72. சி.தீர்த்தநாதன் 24/1, ஐ.எ.எஃப் குடியிருப்பு, முத்தாபுதுப்பேட்டை, சென்னை - 55. சி.வெங்கடேசன் 13, டாக்டர்அம்பேத்கர்தெரு, ராமலிங்கபுரம், காமராஜர்நகர், ஆவடி, சென்னை - 600071.

### கரூர் மாவட்டம்

தலைவர் : பி.மேகநாதன் 52/1, ஆதிதிராவிடர்தெரு, சணப்பிரட்டிஅஞ்சல், கிருஷ்ணராயபுரம்தாலுக்கா, கரூர்மாவட்டம் 639004.

துணைத் தலைவர் : ஜெ.லோகநாதன் 5/96, கே.பேட்டை&அஞ்சல், குளித்தலைதாலுக்கா, கரூர்மாவட்டம்.

அமைப்பாளர் : **ம.அம்பிகாபதி** 3/52, பொய்கைப்புத்தூர், கிருஷ்ணராயபுரம்அஞ்சல், கரூர்மாவட்டம் 639102.

துணை அமைப்பாளர்கள் : பி.வெற்றிவேல் 143, பழையத பால்நிலையம்தெரு, மலைக்கோவில்அஞ்சல், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர்மாவட்டம். பி.சக்திவேல் 8/14, பிச்சக்கவுண்டனூர், கே.பிச்சம்பட்டிஅஞ்சல், கரூர்தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639118. பி.மோகன்குமார் 45/12, தாந்தோணிமலை 4வதுகிராஸ், தாந்தோணிமலைஅஞ்சல், கரூர்தாலுக்கா, கரூர்மாவட்டம் 639005. பி.ராமதாஸ் 7/48, நடுத்தெரு வடக்கு, நெரூர்வடபாகம், பழையூர்அஞ்சல், மண்மங்கலாம் தாலுக்கா, கரூர்மாவட்டம் 639004. ரா.இளையராஜா. 38நேதாஜிநகர், சின்னகுளத்துபாளையம், வெங்கமேடு அஞ்சல், கரூர்மாவட்டம் 639001.

### புதுச்சேரி மாநிலம்

தலைவர்: மு.பழனிசாமி 23, மாரியப்பன்கோவில்தெரு, உத்திரவாகினிபெட், வில்லியனூர், புதுச்சேரி 605110.

துணைத் தலைவர் : அ.கதிரவன் 22, மாதாகோவில்தெரு, ஒதியம்பட்டு, வில்லியனூர், புதுச்சேரி - 605110.

அமைப்பாளர்: **சி.ஆறுமுகம்** 20, பாரதிவீதி, உத்திரவாகினி பேட், வில்லியனூர், புதுச்சேரி 605110.

துணை அமைப்பாளர்கள் : து.அன்பழகன் 12, சங்கோதியம்மன்கோவில்தெரு, உருளையன்பேட்டை, புதுச்சேரி 11. அ. சக்திவேல், 23, புதுநகர், அபிஷேகப்பாக்கம், புதுச்சேரி605 007. சி.திருநாவுக்கரசு 71சி, பெரியபேட், இராம்ஜீநகர், மடுகரை, புதுச்சேரி - 605105. அ.காளி பாண்டிமெயின்சாலை, சுல்தான்பேட்டை, வில்லியனூர், புதுச்சேரி 605110. சு.கலியமூர்த்தி 16, முதல்தெரு, புதுநகர், ஊசுடுபேட், வில்லியனூர், புதுச்சேரி 605110. க.தெய்வேந்திரன் 3மாரியம்மன்கோவில் தெரு, பணயடிக்குப்பம், நெட்டாப்பாக்கம், புதுச்சேரி 605106. ந.ஆறுமுகம் 28, முதல்தெரு, அரியூர்பேட், புதுச்சேரி. ஏ.கமலக்கண்ணன் 38, அம்பேத்கர்தெரு, காட்டேரிக்குப்பம், புதுச்சேரி 605502. சக்திவேல் 32, புதுநகர், குப்பம்பேட், கொம்பாக்கம், வில்லியனூர், புதுச்சேரி 605110. பா.அய்யனார் 58, மாரியம்மன்கோவில்தெரு, பிள்ளையார்குப்பம், ஊசுடு, புதுச்சேரி 605502.

### தஞ்சை மாநகரம்

அமைப்பாளர் : **ஆர்.மணிகண்டன்** 58, செக்கடித்தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர். துணைஅமைப்பாளர்கள் ஜி.பிரதாப் 125, மேல்லயன், எ.ஒய்.எ. நாடார்சாலை, வடக்குசாலை, தஞ்சை. வி.தமிழ்வேந்தன் 47எ, பொந்திரிபாளையம், வடக்குவாசல், தஞ்சாவூர். வே.குணசேகரன் 97, பொந்திரிபாளையம், வடக்குவாசல், தஞ்சாவூர். ப.சுரேஷ்காந்தி 10633, இராவுத்தாபாளையம், கீழாவாசல், தஞ்சாவூர். எஸ்.சுரேஷ் 95, ருக்குமணியம்மாள்மடம், பாலோபநந்தவனம், தஞ்சாவூர்.

### தஞ்சை மத்திய மாவட்டம்

தலைவர்: கே. ரவிச்சந்திரன் பாலையாப்பட்டி, செங்கிப்பட்டி, பூதலூர், தஞ்சைமாவட்டம். துணைத்தலைவர் அ. பழனியப்பன் மறியல், என்.கே. ரோடு, தஞ்சாவூர்.

அமைப்பாளர் : **மு. சிந்தனைசெல்வம்** 97, எ.எஸ். அன்பழகன்நகர்விரிவாக்கம் வெண்ணாற்றங்கரை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் : எம். மதியழகன் பரிசுத்தம்நகர், களிமேடு, தஞ்சாவூர். சு. கல்யாணசுந்தரம் மேலையூர், திருமங்கலக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர். இரா. ஜோதிவேல், நண்டம்பட்டி, புதுக்குடி, பூதலூர், தஞ்சாவூர். தாடிசெல்வம் (எ) விஜயராகவன் ஜெபமாலைபுரம், மேலவெளி, தஞ்சாவூர். மா. குளஞ்சியப்பா, நடுலைன், எ.ஒய்.எ. நாடார்ரோடு, வடக்குவாசல், தஞ்சாவூர்.

### நீலகிரி மாவட்டம்

தலைவர் : கே.சின்னான் காந்திபுரம், தொட்டகம்பை, மீஞ்சூர், நீலகிரிமாவட்டம்.

துணைத் தலைவர் : எல்.செல்வன் தொட்டன்னி, கக்குச்சி, உதகை, நீலகிரிமாவட்டம்.

அமைப்பாளர் : **இ.எம்.ராம்குமார்** பொம்மன்மேல்பகுதி, கீழ்கோத்தகிரி, நீலகிரிமாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : இரா.மூர்த்தி கே.கேநகர், உப்பட்டி, பந்தலூர், நீலகிரிமாவட்டம். ஆர்.மகாவிஷ்ணு ஆதிதிராவிடர்காலனி, சேரம்பாடி, நீலகிரிமாவட்டம். ஜி.சசிகுமார் பழையஉதகை, உதகை, நீலகிரிமாவட்டம். மா.மகாலிங்கம் 16/231, மருதுஇல்லம், கைக்காட்டி, உதகை, நீலகிரிமாவட்டம். எஸ்.சந்திரமோகன் காந்திநகர், சுங்கம் சேரம்பாடி, பந்தலூர், நீலகிரிமாவட்டம். எஸ்.வெங்கடேஷ் புட்சர்தெரு, உதகை, நீலகிரிமாவட்டம். மு. ஜெயசீலன் 4/8,எ, வாழவயல், தேவாலா அஞ்சல் நீலகிரிமாவட்டம். வி.ரகுபதி பெப்ரூக்அவுஸ், நொண்டிமேடு, உதகை, நீலகிரிமாவட்டம். ஆர்.தம்பு (எ) ஆனந்தகுமார் அண்ணாநகர், கொடநாடு. நீலகிரிமாவட்டம்.

"அண்ணாஅறிவாலயம்" சென்னை 18.

**ஆ.கிருஷ்ணசாமி**, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
. தி.மு.க.ஆதிதிராவிடர்நலக்குழு



தந்தை பெரியார் அவர்களின்145 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, அரு.வீரமணி, கீரை. தமிழ் ராஜா, பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, ஆ.செந்தில், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், மு.க.ராம கிருஷ்ணன், ஆர், ஆர்,சாமிநாதன், அ.ரெத்தினம், மணிமொழி மனோகரன், இராம. செல்வராஜ், அரங்கநாயகம், டி. அப்புக்காளை, தெய்வானை, பிரேம் ஆனந்த், ஆ.நாகராஜன், சதீஷ், ராமச்சந்திரன், முத்துக்கருப்பன், அறிவு, தியாகு, கவிவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் வெளுத்து வாங்கிய கனமழை!

சென்னை, செப். 20 –

எழும்பூர், சென்ட்ரல், சிந்தாதரிப் பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெளுத்து வாங்கியது.

கனமழை பெய்ததால் வெப்பம் தணிந்து சென்னையில் குளிர்ச்சி யான சூழல் ஏற்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. சைதாப்பேட்டை, கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், திருவல்லிக் கேணி, சேப்பாக்கம், சேத்துப்பட்டு, எழும்பூர், சென்ட்ரல், சிந்தாதரிப் பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெளுத்து வாங்கியது. வேளச்சேரி, தரமணி, கந்தன்சாவடி, பெருங்குடி உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்தது. சென்னையில் காலை முதல் மாலை வரை வெயில் சுட்டெரிக்கின்றது. இரவு நேரங்களில் மழை வெளுத்து வாங்கி வருகிறது.



அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் உள்ளனர்.

## கலைஞானி கமல்ஹாசன் முதல் பிரதியைப் பெற்று சிறப்புரை! இந்து என்.ராம் - மனோஜ்குமார் சொந்தாலியா - பாலசுப்பிரமணியன் ஆதித்தன் - எல்.ஆதிமூலம் வாழ்த்துரை!

# "கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்" நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

சென்னை, செப், 20 -

"கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்" நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார். இந்நூலின் முதல் பிரதியை கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

விகடன் குழுமம் சார்பில், "கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழா இன்று (20.9.2023 - புதன்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை - கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இந்நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

நூலின் முதல் பிரதியை கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

விகடன் குழுமம் நிர்வாக இயக்குநர் பா.சீனிவாசன் வரவேற்புரை யாற்றுகிறார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் 'தி இந்து' குழுமம் இயக்குநர் 'இந்து' என். ராம், 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலைவர் - நிர்வாக இயக்குநர் மனோஜ் குமார் சொந்தாலியா, 'தினத்தந்தி' இயக்குநர் பாலசுப்பிரமணியன் ஆதித்தன், 'தினமலர்' வர்த்தகம் - தொழில்நுட்பப் பிரிவு இயக்குநர் எல்.ஆதிமூலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

'ஆனந்த விகடன்' ஆசிரியர் தி.முருகன் நன்றி கூறுகிறார்.

## பிரதமர் மோடி தொடங்கியுள்ள

# விஸ்வகர்மா திட்டம் மோசமான நடவடிக்கை!

## இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் சாடல்!

நாகர்கோவில், செப். 20 -

விஸ்வகர்மா திட்டம் மோசமான நடவடிக்கை என்று முத்தரசன் தெரிவித்து உள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் நேற்று முன்தினம் மாலை நாகர்கோவிலில் அளித்த பேட்டி வருமாறு : -



பிரதமர் மோடியின் பிறந்தநாளில் விஸ்வகர்மா திட்டத்தை தொடங்கியுள்ளார். 18 தொழில்களை கொண்டுள்ள இந்த விஸ்வகர்மா திட்டத்திற்கு குடும்ப ரீதியில் மேம்படுத்த அறிவிக்காமல், அவர்களது பிள்ளைகள் 18 வயது கடந்த பிறகு மேல் படிப்புக்கு செல்லாமல் அவர்களுக்கு தொழில் தொடங்க கடன் உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இது மோசமான நடவடிக்கை. மோடி அறிவித்துள்ள இந்த திட்டத்தை திரும்ப பெற வேண்டும். மோடியும் பா.ஜ.வும் சனாதனத்தை பற்றி அதிகமாக பேசுகிறார்கள். 2014ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாததால் சனாதனத்தை பற்றி பேசுகின்றனர். மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பா.ஜ.க.வும் பிரதமர் மோடியும் சனாதனம் பெயரில் தப்பிக்க முயற்சி செய்கிறார்கள். பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியை ஆர்.எஸ்.எஸ். தான் நடத்தி வருகிறது. நாடாளுமன்ற திறப்பு விழாவின் போது குடியரசுத் தலைவர் புறக்கணிப்பட்டார். ஜி 20 மாநாட்டில் தேநீர் விருந்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்படவில்லை. ஜனநாயகத்தை சாகடிக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## செஞ்சியில் 1502 பேருக்கு

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி அட்டை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி, செப். 20 -

கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக வெளியிடப்பட்ட தி.மு.க. தேர்தல் அறிக்கையில்தமிழ் நாட்டில் உள்ள தகுதி வாய்ந்த குடும்ப தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் ரூ 1000 வழங்க மகளிர் உரிமை திட்டத்திற்கு ரூபாய் 7000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம் அண்ணா பிறந்தநாள் செப்டம்பர் 15ஆம் தேதி இன்று தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அண்ணா பிறந்த நாளான இன்று காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை முறைப்படி தொடங்கி வைத்தார். இதையடுத்து செஞ்சி தொகுதி சார்பில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் தொடக்க விழா செஞ்சியில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திண்டி வனம் சார் ஆட்சியர் கட்டாரவி தேஜா தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதார் ரவிக்குமார், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள்நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1500 மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைபெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முழுவதும் ஏழை குடும்பங்கள் பயன் பெறும் வகையில் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைத்துள்ளார்கள். ஒரே நேரத்தில் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒரே கையெழுத்தினால் பலன் சென்று சேரும் வகையில் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பெண்கள்வாழ்வாதாரம் உயர்வதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பெண்கள் உயர் கல்வி பெறுவதற்குபுதுமைப் பெண் திட்டம்,காலை உணவு திட்டம் மக்களை தேடி மருத்துவம் இல்லம் தேடிக் கல்வி போன்ற என்னற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் முதலமைச்சர்உலகத்திலேயே சிறந்த திட்டமாக பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக ஒரு திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைத்ததைபெண்கள்வரவேற்று மகிழ்ச்சியுடன் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன்,அண்ணாதுரை,விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி சாந்தி சுப்பிரமணியன்,துரை இளம்வழுதி மணிமாறன் ஒன்றிய துணை சேர்மன்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன்,செஞ்சி பேரூராட்சிமன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல் மணி, மேல்மலையனூர் வட்டாட்சியர் முகமது அலி,செயல் அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.செஞ்சி வட்டாட்சியர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், கே.வீரமணி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட நிர்வாகிகள் குமார் கே.முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, சிறுபான்மையினர் நல பிரிவு மாவட்ட அமைப்பாளர் அயூப், பகுதி கழக செயலாளர்கள் பொ.ராமச்சந்திரன், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி, ஜிசண்முகம், கே.சந்திரசேகர், விமல் (நந்தகுமார்), இளையகோபால், நாகரத்தினம், பாத்திமா, சசிகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.